## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 9-5 - இன்னுயிர்ச்சேவல்
### (நெஞ்சில் கண்ட நாயகனை நேரில் காண ஆசைப்பட்ட பராங்குச நாயகி, அவனை நினைவிக்கும் பொருள்களால் தான் தளர்ந்தமை கூறுதல்)

3601 * இன்னுயிர்ச் சேவலும் நீரும் கூவிக்கொண்டு * இங்கு எத்தனை *
என்னுயிர் நோவ மிழற்றேல்மின் * குயில் பேடைகாள்! **
என்னுயிர்க் கண்ணபிரானை * நீர் வரக் கூவுகிலீர் *
என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கும் * இத்தனை வேண்டுமோ? 1

3602 இத்தனை வேண்டுவதன்று அந்தோ! * அன்றில் பேடைகாள்! *
எத்தனை நீரும் நும் சேவலும் * கரைந்து ஏங்குதிர் **
வித்தகன் கோவிந்தன் * மெய்யனல்லன் ஒருவர்க்கும் *
அத்தனையாம் இனி * என்னுயிர் அவன் கையதே 2

3603 அவன் கையதே எனது ஆருயிர் * அன்றில் பேடைகாள்! *
எவம்[1] சொல்லி நீர் குடைந்தாடுதிர் * புடை சூழவே **
தவம் செய்தில்லா * வினையாட்டியேன் உயிர் இங்குண்டோ? *
எவன் சொல்லி நிற்றும்? * நும் ஏங்கு கூக்குரல் கேட்டுமே 3

3604 கூக்குரல் கேட்டும் * நம் கண்ணன் மாயன் வெளிப்படான் *
மேற்கிளை கொள்ளேல்மின் * நீரும் சேவலும்[2] கோழிகாள்! **
வாக்கும் மனமும் * கருமமும் நமக்கு ஆங்கதே *
ஆக்கையும் ஆவியும் * அந்தரம் நின்றுழலுமே 4

3605 அந்தரம் நின்றுழல்கின்ற * யானுடைப் பூவைகாள்! *
நும் திரத்தேதும் இடையில்லை * குழறேன்மினோ **
இந்திர ஞாலங்கள் காட்டி * இவ்வேழுலகும் கொண்ட *
நம் திருமார்பன் * நம்மாவி உண்ண நன்கெண்ணினான் 5

3606 நன்கெண்ணி நான் வளர்த்த * சிறுகிளிப் பைதலே! *
இன்குரல் நீ மிழற்றேல் * என்னாருயிர்க் காகுத்தன் **
நின் செய்ய வாயொக்கும் வாயன் * கண்ணன் கைகாலினன் *
நின் பசுஞ்சாம நிறத்தன் * கூட்டுண்டு நீங்கினான் 6

3607 கூட்டுண்டு நீங்கிய * கோலத் தாமரைக் கண் செவ்வாய் *
வாட்டமில் என் கருமாணிக்கம் * கண்ணன் மாயன் போல் **
கோட்டிய வில்லொடு * மின்னும் மேகக் குழாங்கள்காள்! *
காட்டேன்மின் நும்முரு * என்னுயிர்க்கு அது காலனே 7

---

[1] எவன்
[2] நீரும் நும் சேவலும்

3608 உயிர்க்கது காலன் என்று * உம்மை யான் இரந்தேற்கு * நீர்
குயிற்பைதல்காள்! * கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர் **
தயிர்ப் பழஞ்சோற்றொடு * பால் அடிசிலும் தந்து * சொல்
பயிற்றிய நல்வளம் ஊட்டினீர் * பண்புடையீரே! 8

3609 பண்புடை[3] வண்டொடு தும்பிகாள்! * பண் மிழற்றேன்மின் *
புண்புரை வெல்கொடு * குத்தாலொக்கும் நும் இன்குரல் **
தண்பெருநீர்த் தடந்தாமரை * மலர்ந்தால் ஒக்கும்
கண் பெருங்கண்ணன் * நம்மாவி உண்டெழ நண்ணினான் 9

3610 எழ நண்ணி நாமும் * நம் வானனாடனோடு ஒன்றினோம் *
பழன நன்னாரைக் குழாங்கள்காள்! * பயின்றென் இனி? **
இழை நல்லவாக்கையும் * பையவே புயக்கற்றது *
தழை நல்ல இன்பம் தலைப்பெய்து * எங்கும் தழைக்கவே 10

3611 * இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்த * பல்லூழிக்கு *
தண் புகழ் ஏத்தத் * தனக்கருள் செய்த மாயனை **
தென்குருகூர்ச் சடகோபன் * சொல் ஆயிரத்துள் இவை *
ஒன்பதோடு ஒன்றுக்கும் * மூவுலகும் உருகுமே 11

**அடிவரவு:** இன்னுயிர் இத்தனை அவன் கூக்குரல் அந்தரம் நன்கு
கூட்டு உயிர் பண்பு எழ இன்பம் உருகும்

[3] பண்புரை